**சார்பு நீதிமன்றம், ஓமலூர்**
SC.No.119/2020

நாள்: 15.06.2026

The oaths Act 1969 Act No.44/1969 விதிமுறைகளின்படி 15.06.2026ம் நாளாகிய இன்று திருமதி.சித்ரா, கண்காணிப்பாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதி மொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை திறந்த நீதிமன்றத்தில் செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| சாட்சி: | அ.சா.1 | ஜாதி | :----------- |
| பெயர் | எட்டியாகவுண்டர் | தொழில் | |
| த/பெ. | | மதம் | |
| கிராமம் | | வயது | |
| வட்டம் | | | |

**(All Accused present)**

**மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. சம்பவம் 01.06.2019ம் தேதி காலை 7.30 மணிக்கு நடந்ததா என்றால் இல்லை, மாலை 7.30 மணிக்கு நடந்தது. நான் காவல் நிலையத்தில் 02.06.2019ம் தேதிதான் புகார் கொடுத்தேன் என்றால் ஆமாம். 01.06.2019ம் தேதி சம்பவம் நடந்தநிலையில் ஒருநாள் காலதாமதமாக புகார் கொடுப்பதற்கு காரணம் குறித்து விளக்கம் எதுவும் நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தேன். போலீசார் என்னை விசாரித்து கொண்டார்கள்.

2. நான் எந்த தேதியில், எந்த மருத்துவமனைக்கு சென்றேன் என்றால் சேலம் அரசு மருத்துவமனைக்கு, சம்பவத்தன்றே உடனே சென்றுவிட்டேன். எத்தனை மணிக்கு சேலம் அரசு மருத்துவமனைக்கு சென்றேன் என்றால் 7.30 மணிக்கு அடிப்பட்டது. எனக்கு மயக்கமாகிவிட்டது. மருத்துவமனைக்கு சென்ற பின்னர் தான் நினைவு திரும்பியது. எனவே தற்போது நேரம் நினைவில்லை. நான் சேலம் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றபோது எனக்கு சுயநினைவு இல்லை என்றால் சரிதான்.

3. காட்டு பிரச்சனைக்கு நியாயம் பேசுவதற்காக சம்பவ இடத்திற்கு சென்றதாக முதல் விசாரணையில் சொல்லியிருக்கும் நிலையில் யார் யார் நியாயம் பேச சென்றோம் என்றால் நான் மட்டும் தான் சென்றேன். சம்பவ இடத்திற்கு சென்று கோவிந்தனிடம்

பேசி தீர்த்து கொள்ளலாம் என்று சொல்லி கொண்டிருக்கும்போதே வலது கையின் ஆள்காட்டி விரலை உடைத்துவிட்டார்கள்.

4. நான் நியாயம் பேச சென்றபோது என்னுடன் யாரும் வரவில்லையா என்றால் என் மனைவி வந்தார். நான் நியாயம் பேச ராமயன்காட்டிற்கு சென்றேனா அல்லது என் மகள் வீட்டிற்கு சென்றனே என்றால் ராமயன்காட்டிற்குதான் சென்றேன். நான் ராமயன்காட்டிற்கு சென்றபோதே எதிரிகள் எங்குஇருந்தார்களா என்றால் ஆமாம். கூட்டமாக இருந்தார்கள். எனக்கும், எதிரிகளுக்கும் எவ்வளவு நேரம் சண்டை நடந்ததாக சொல்கிறேன் என்றால் ஒரு 5 நிமிடம் கூட இருக்காது.

5. சம்பவம் நடந்ததை எத்தனை பேர் வேடிக்கை பார்த்தார்கள் என்றால் என்னை வலது கையிலும், இடது காலிலும், வயிற்றிலும், முதுகிலும், அடித்த உடனே நான் மயங்கிவிட்டேன். எனவே எத்தனை பேர் வேடிக்கை பார்த்தார்கள் என்று எனக்கு தெரியவில்லை. காட்டுப்பிரச்சனை எத்தனை ஆண்டுகளாக நடந்து வருகிறது என்றால் 5, 6 ஆண்டுகளாக நடந்துவருகிறது. எதிரிகள் குடும்பத்திற்கும், எங்கள் குடும்பத்திற்கும் போக்குவரத்து இல்லை என்றால் சரிதான். நான் கொடுத்த புகாரில் எதிரிகள் டிராக்டரின் மீது கல்லை போட்டு உடைத்துவிட்டது குறித்து சொல்லவில்லையா என்றால் இல்லை. சொன்னேன்.

6. புகார் வாக்குமூலம் கொடுத்த அன்று போலீசார் என்னை விசாரித்தார்களா என்றால் இல்லை மறுநாள் சேலம் அரசு மருத்துவமனைக்கு காவல் உதவி ஆய்வாளர் வந்து விசாரித்தார். நான் டிராக்டர் உடைத்தது குறித்து புகாரில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றாலும் அதற்கு காரணம் எதிரிகள் அவ்வாறு எந்த செயலிலும் ஈடுபடவில்லை என்பதால் தான் என்றால் சரியல்ல. எதிரிகள் டிராக்டரை உடைத்து கொண்டிருந்தை நான் போய் கேட்டதால் தான் பிரச்சனை வந்தது.

7. அரசு மருத்துவமனையில் விசாரித்தற்கு பின்னிட்டு மீண்டும் என்னை விசாரித்தார்களா என்றால் இல்லை. இந்த சம்பவம் சம்பந்தமாக என் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டதா என்றால் ஆமாம். காவல் நிலையத்தில் நான் நிபந்தனை கையெழுத்து போட்டுக்கொண்டிருந்தேன் என்றால் ஆமாம். என் தரப்பில் எத்தனை பேர் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டிருந்தது என்றால் என் மீது தான் பதிவு செய்யப்பட்டிருந்தது.

8. சம்பவயிடத்திற்கு யார்யார் சம்பவத்தின்போது வந்தார்கள் என்றால் சேட்டு, முத்துசாமி, மற்றும் பக்கத்து காட்டுக்காரர்கள் வந்தார்கள். போலீசார் சம்பவயிடத்தில் யார்யாரை விசாரித்தார்கள் என்று தெரியுமா என்றால் தெரியாது. எதிரிகள் அடித்ததால் எனக்கு மயக்கம் ஏற்பட்டு சுயநினைவு இல்லை என்றும், மருத்துவமனைக்கு சென்ற பின்னர் தான் சுயநினைவுக்கு திரும்பியதாக நான் சொல்லும் நிலையில் சம்பவ இடத்தில் யார் யார் இருந்தார்கள் என்பது எனக்கு எப்படி தெரியும் என்றால் நான் அங்கு போனபோது நிறைய பேர் இருந்தார்கள் யார்யார் என்று குறிப்பிட்டு தெரியவில்லை.

9. நான் தற்போது எனது குறுக்கு விசாரணையில் எதிரிகள் டிராக்டரை கல்லால் அடித்தது குறித்து கேட்க சென்றபோது தான் பிரச்சனை ஆனதாக சொல்லும் நிலையில் இதற்கு முரண்பட்டு புகாரில் எதிரிகள் எங்களை அடித்துவிட்டார்கள் என்றும், பின்னர் கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்றும், பின்னர் கிளம்பி செல்லும்போது கல்லை டிராக்டரின் மீது வீசியதாகவும் சொல்லியிருப்பதற்கு காரணமே நான் சொல்வது போல எந்த சம்பவமும் நடக்கவில்லை என்தால் தான் என்றால் சரியல்ல.

10. கோமதிக்கும், எதிரிகளுக்கும் ஏற்கனவே முன்விரோதம் இருந்து வருகிறது என்றால் ஆமாம். எனவே கோமதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், நான் புகாரில் சொன்னதுபோலவோ, முதல் விசாரணையில் சொன்னதுபோலவோ எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

சாட்சி சொன்ன சங்கதிகள் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டி அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன் கையொப்பம் இடப்பட்டது.

(ஒப்பம்/–த.மாலதி),
உதவி அமர்வு நீதிபதி,
ஓமலூர்.

**சார்பு நீதிமன்றம், ஓமலூர்**
**SC.No.119/2020**

நாள்: 15.06.2026

The oaths Act 1969 Act No.44/1969 விதிமுறைகளின்படி 15.06.2026ம் நாளாகிய இன்று திருமதி.சித்ரா, கண்காணிப்பாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதி மொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை திறந்த நீதிமன்றத்தில் செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| சாட்சி: | அ.சா.5 | ஜாதி | :----------- |
| பெயர் | குப்புசாமி | தொழில் | |
| த/பெ. | | மதம் | |
| கிராமம் | | வயது | |
| வட்டம் | | | |

**(All Accused present)**

**முதல் விசாரணை:-**

1. நான் தற்போது டேனிஷ்பேட்டையில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். அ.சா.1யும் தெரியும். அ.சா.1 வகையறாவுக்கும், எதிரிகளுக்கும், சம்பவத்திற்கு 1 வருடத்திற்கு முன்பிருந்து தடவழி பிரச்சனை இருந்துவந்தது கடந்த 01.06.2019ம் தேதி மாலை சுமார் 4, 5 மணிக்கு அ.சா.1 வகையறாவுக்கும், எதிரிகளுக்கும் பிரச்சனை ஏற்பட்டு ஒருவருக்கொருவர் அடிப்பட்டு கொண்டதாக கேள்விபட்டேன். பின்னர் 02.06.2019ம் தேதி மதியம் 12 மணி சுமாருக்கு வெங்கடேஷ்சன் நிலத்திற்கு அருகே சென்றபோது தீவட்டிப்பட்டி போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து சம்பவ இடத்தையும், தட வழியையும் பார்வையிட்டு படம் வரைந்து மகசர் தயார் செய்து என்னையும், சேட்டையும் சாட்சியாக இருக்கும்படி கேட்டார்கள். நாங்கள் இருவரும் சாட்சியாக இருந்து கையொப்பம் செய்து கொடுத்தோம். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள கையொப்பம் என்னுடையதல்ல. வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எனது பெயர் பி.குப்புசாமி. சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றால் ஆமாம். போலீஸ்அழைத்ததன் பேரில் தான் சேட்டு என்பவர் வந்தாரா என்றால் இல்லை. எல்லோரும் அங்கேயே இருந்தோம். போலீசார் வந்து அங்கிருந்தவர்களை

விசாரித்தார்கள். போலீசார் சம்பவ இடத்திற்கு வந்தபோது என்னையும், சேட்டையும் தவிர வேறு யார் இருந்தார்கள் என்றால் நிறைய பேர் இருந்தார்கள்.

2. போலீசார் வந்து அந்த இடத்தில் வரைபடம் வரைந்தார்களா என்றால் ஆமாம். பார்வை மகசரில் உள்ள 2வது கையெழுத்து என்னுடைதல்ல என்றால் ஆமாம். சம்பவ இடத்திற்கும், எனக்கும் என்ன சம்பந்தம் என்றால் எனக்கும் அதில் பாகம் இருக்கிறது. என்னிடம் காட்டப்படும் பார்வை மகசர் மற்றும் வரைபடத்தில் எனக்கு ஏதாவது தெரிகிறதா என்றால் இல்லை. தடவழியில் எனக்கும் பாகம் இருப்பதால் போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க என் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடத்தில் கையொப்பம் செய்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>அரசு தரப்பில் சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக அறிவிக்ககோரி அனுமதிக்கப்பட்டதன்பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. கடந்த 02.06.2019ம் தேதி மதியம் 12 மணிக்கு நான் வெங்கடேசன் நிலம் அருகில் இருந்தபோது போலீசார் வழக்கு சம்பந்தமாக வெங்கடேசன் நிலம் அருகில் வந்து சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் தயார் செய்து வரைபடம் வரைந்தார்கள் என்றால் ஆமாம். நான் மேற்படி பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்ததற்கு சாட்சியாக நானும், சேட்டு என்பவரும் சாட்சி கையொப்பம் செய்துவிட்டு தற்போது வயோதிகத்தால் ஏற்பட்ட மறதியின் காரணமாக மாற்றி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை இல்லை</u>

சாட்சி சொன்ன சங்கதிகள் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டி அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன் கையொப்பம் இடப்பட்டது.

(ஒப்பம்/–த.மாலதி),
உதவி அமர்வு நீதிபதி,
ஓமலூர்.

**சார்பு நீதிமன்றம், ஓமலூர்**

SC.No.119/2020

நாள்: 15.06.2026

The oaths Act 1969 Act No.44/1969 விதிமுறைகளின்படி 15.06.2026ம் நாளாகிய இன்று திருமதி.சித்ரா, கண்காணிப்பாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதி மொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை திறந்த நீதிமன்றத்தில் செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| சாட்சி: | அ.சா.2 | ஜாதி | :----------- |
| பெயர் | கோமதி | தொழில் | |
| த/பெ. | | மதம் | |
| கிராமம் | | வயது | |
| வட்டம் | | | |

**(All Accused present)**

**மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. என் பெயர் கோமதி. நான் டேனிஷ்பேட்டையில் குடியிருக்கிறேன். எனது கணவர் விவசாயம் செய்து வருகிறார். எனக்கும், எதிரிகளுக்கும் எத்தனை வருடமான பிரச்சனை நடந்து வருகிறது என்றால் சம்பவத்திற்கு ஒரு வடத்திற்கு முன்பிருந்து நடந்து வருகிறது. சிவில் வழக்கு ஏதாவது இதுகுறித்து தாக்கல் செய்திருக்கிறோமா என்றால் இல்லை. ஆனால் ஆர்.டி.ஓ நீதிமன்றத்தில் வழக்கு போட்டிருக்கிறோம். அந்த வழக்கின் நிலை குறித்து தெரியுமா என்றால் விசாரணை முடித்துவிட்டது இன்னும் தீர்ப்பு வரவில்லை.

2. சம்பவத்தன்று என் அப்பா என் வீட்டிற்கு வந்திருந்தாரா என்றால் இல்லை. என் வீட்டிற்கு வருவதற்காக சம்பவ இடத்தின் வழியாக வந்துகொண்டிருந்தார். நியாயம் பேசுவதற்காக என் வீட்டிற்கு வந்ததாக என் தகப்பனார் சொல்கிறார் என்றால் ஆமாம். என் வீட்டிற்கு வருவதற்காக தான் வந்துகொண்டிருந்தார். என் அப்பா என் வீட்டிற்கு வந்து சேர்வதற்கு முன்பே தகராறு நடந்தது என்றால் ஆமாம். என் அப்பா வருவதற்கு முன்பு எங்களுக்கும், எதிரிகளுக்கும் வாய் தகராறு நடந்து கொண்டிருந்தது, என் அப்பா வந்த பிறகு தான் தகராறு நடந்தது.

3. என் அப்பா வருவதற்கு முன்பே கல்லால் எதிரிகள் எங்களை அடித்தார்களா என்றால் ஆமாம். கல்லை எங்களை நோக்கி எறிந்து கொண்டிருந்தார்கள். நானும், எனது கணவரும் இருந்தோம். சண்டை எவ்வளவு நேரத்தில் முடிந்தது என்றால் அடிதடி 5 நிமிடத்தில்

முடிந்தது. என் அப்பா வருவதற்கு முன்பே டிராக்டரை எதிரிகள் கல்லால் அடித்து சேதாரம் ஏற்படுத்தி விட்டார்களா என்றால் கல்லை கொண்டு டிராக்டர் மீது எறிந்தார்கள். என் அப்பா வருவதற்கு முன்பே சேதாரம் ஏற்பட்டதா அல்லது பின்னர் கல்லை எறிந்து சேதாரம் ஏற்பட்டதா என்று தற்போது நினைவில்லை.

4. என் அப்பாவை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்த பின்னிட்டு தான் டிராக்டருக்கு சேதாரம் ஏற்பட்டது தெரியவந்ததா என்றால் இல்லை. எல்லோருக்கும் அடிபட்டு விட்டதால் எல்லோரும் தான் மருத்துவமனைக்கு சென்றோம். எதிரிகள் எங்களை அடித்ததால் நாங்கள் கீழே விழுந்து கிடந்தோம். அப்போதே எதிரிகள் டிராக்டரை நொறுக்கிறார்கள் என்று எங்களுக்கு தெரியும். என் அப்பா எங்களை அடித்த பின்னர் தான் டிராக்டரை அடித்தாக சொல்லியிருக்கிறார் என்றால் இல்லை ஆரம்பத்திலிருந்தே டிராக்டரை அடித்துகொண்டுதான் இருந்தார்கள்.

5. நான் எனது முதல் விசாரணையின் ஆரம்பத்தில் என் அப்பா வருவதற்கு முன்னர் வாய்தகராறு செய்ததாக தான் சொல்லியிருக்கிறேன் என்றால் ஆமாம். வருவதற்கு முன்பு வாய்தகவராறு தான் நடந்தது. எதிரிகள் கல்லை டிராக்டர் மீது வீசியதால் வாய் தகராறு ஏற்பட்டதாக சொன்னேன். எங்களுக்கும், எதிரிகளுக்கும் ஏற்கனவே முன் விரோதம் இருந்தது என்றாலும், அந்த முன்விரோதத்தை மனதில் வைத்து எதிரிகள் மீது பொய்யாக புகார் கொடுத்திருக்கிறோம் என்றாலும், நாங்கள் சொல்வதுபோல டிராக்டருக்கு எந்த சேதாரமும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல.

6. என் அப்பாவின் கையை உடைத்து, என்னையும், என் கணவரையும் கல்லால் அடித்தார்கள் இது சத்தியமான உண்மை என்று சாட்சி கூறுகிறார். நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது குடும்பத்திற்கும், எதிரிகளின் குடும்பத்திற்கும் ஏற்கனவே முன்விரோதம் இருந்து வந்ததால் அதனை மனதில் வைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகள் சம்பவதன்று எந்த தகராறிலும் ஈடுபடவில்லை என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை இல்லை</u>

சாட்சி சொன்ன சங்கதிகள் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டி அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன் கையொப்பம் இடப்பட்டது.

(ஒப்பம்/–த.மாலதி),
உதவி அமர்வு நீதிபதி,
ஓமலூர்.